**விருதுநகர் நிருவாக மாவட்டப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை**

**பிறப்பிப்பவர் : திரு.D.T.பூபதி.,M.Sc.B.Ed.,**

நாள். 05.03.2025

எண். 815/ஆ2/2025

பொருள்: மதிப்பு நிர்ணயம் – விருதுநகர் பதிவு மாவட்டம் சிவகாசி சார்பதிவகம் – ஆவண எண். 1455/2025 ஈஞ்சார் கிராமம் – சர்வே எண். 1470/2A5 – **விஸ்தீரணம்** – 9230 ச.மீட்டர் (ஏக்கர் 2.28) – மனைப்பிரிவுக்கு மதிப்பு நிர்ணயம் செய்து ஆணையிடல் – தொடர்பு

பார்வை: சார்பதிவாளர், சிவகாசி கடித எண். 47/2025, நாள். 08.02.2025

........................

**ஆணை**

விருதுநகர் பதிவு மாவட்டம், **சிவகாசி சார்பதிவகம்,** ஆவண எண். 1455/2025–ல் கண்ட ஈஞ்சார் கிராமம், சர்வே எண். 1470/2A5–ல் உருவாக்கப்பட்டுள்ள மனைப்பிரிவுக்கு மதிப்பு நிர்ணயம் செய்ய வேண்டி பார்வையில் காணும் சார்பதிவாளரின் கடிதவழி மதிப்பு நிர்ணய கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மதிப்பு நிர்ணய கருத்துரு பரிசீலிக்கப்பட்டதில், சிவகாசி சார்பதிவகம், ஆவண எண்.1455/2025–ல் கண்ட சிவகாசி கிராமம் சர்வே எண். 1470/2A5ல் ஹெக் 0.92.30க்கு ஏக்கர் 2 செண்டு 28 உள்ள நிலத்தினை பாதைகள் ஒதுக்கி மனைப்பிரிவுகளாக பிரித்து உருவாக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக துணை இயக்குநர், விருதுநகர் அவர்களின் கடித எண்.200YMEO/2024/TCP, நாள். 18/12/2024, மனைப்பிரிவு வரைபட அனுமதி எண். ம.வ/ந.ஊ.து.இ(விருமா) எண்.179/2024 மற்றும் சாமிநத்தம் ஊராட்சித்தலைவரின் கடித எண். 03/2024–2025 நாள்.19.12.2024 ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் கட்டுப்பட்ட பிளாட் எண்.30 –க்கு 181.211 சதுரமீட்டர் (செண்டு 4.47) பரப்பு கொண்ட காலிமனையிடமாக ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆவண சொத்தின் நில அமைவிடம், உள்ளூர் விசாரணை, வாக்குமூலம், சுற்றுப்புற புல எண்களின் வழிகாட்டி மதிப்பு மற்றும் ஆவணப்பதிவுகளின் அடிப்படையில், மேற்படி கிராம சர்வே எண். 1470/2A5, விஸ்தீரணம் – ஏக்கர் 2.28ல் உருவாக்கப்பட்டுள்ள மனைப்பிரிவுக்கு குடியிருப்புப்பகுதி தரம்–I வகை –II (RCI–II) என்ற புதிய வகைப்பாட்டில் சதுரடி1.க்கு ரூ.210/– (ரூபாய் இருநூற்று பத்து மட்டும்) என மதிப்பு நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்படி மதிப்பு நிர்ணயம் சம்மந்தப்பட்ட புல எண்ணுக்கு மட்டுமே பொருந்தும். சார்பதிவாளரால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருக்களில் விடுதல் ஏதும் இருப்பின், அதனால் ஏற்படும் மதிப்பு இழப்புக்கு சம்மந்தப்பட்ட சார்பதிவாளரே முழு பொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி சர்வே எண்கள் அரசு புறம்போக்கு நிலங்கள்/அனாதீனம்/வக்போர்டு வாரிய சொத்துக்கள்/இந்து சமய அறநிலையத்துறை சொத்து அல்ல என்பதனையும், நீர் நிலைபுறம்போக்கு அல்ல என்பதனையும், ஆவணத்தின் உரிமை குறித்தும் உறுதி செய்து கொள்ள சார்பதிவாளருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மதிப்பு நிர்ணயம் குறித்து ஆவணதாரருக்கு ஆட்சேபணை ஏதுமிருப்பின், இராமநாதபுரம் மண்டல துணைப் பதிவுத்துறைத்தலைவர் அவர்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என்ற விவரம் ஆவணதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டப்பதிவாளர்(நிர்)
விருதுநகர்

5/3/2018

பெறுநர்
1) சார்பதிவாளர்,
சிவகாசி.
2) திரு.பாஸ்கரன்,
திரு.தங்கராஜ்தேவர்,
விருதுநகர்